# நாட்டுப்புற நம்பிக்கைகளும் அதன் விளைவுகளும்

**முனைவர் செ.ஐடா**
**உதவிபேராசிரியை,தமிழ்த்துறை(சுயநிதி),**
**திருச்சிலுவை கல்லூரி(தன்னாட்சி),**
**நாகர்கோவில்.**

125

**ஆய்வுச் சுருக்கம்:**

நாட்டுப்புற நம்பிக்கைகள் நாட்டுப்பற மக்களின் வாழ்வைக் கட்டமைக்கிறது.வாழ்வின் ஒவ்வொரு படிநிலையையும் நம்பிக்கைகள் மூலமாகவே நகர்த்துகின்றனர்.கண்ணாடி உடைதல் என்பது ஒரு சாதாரண நிகழ்வு ஆனால் அவ்வாறு நடந்தால் கெடுதல் வரும் என்பது நாட்டுப்புற மக்களின் நம்பிக்கையாக அமைகிறது. இதுபோல் மனைவி கற்பமாக இருந்தால் சவரன் செய்யாமைஇமச்சங்கள் பற்றிய நம்பிக்கை கிழமை பற்றிய நம்பிக்கை என நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள் தொடர்ந்துச் செல்கிறது.சகுனம் பார்க்கும் பழக்கத்தால் பல இடங்களுக்குச் செல்லும் போது நல்ல சகுனத்திற்காக காத்திருக்கின்றனர். இதனால் விலைமதிப்பில்லாத காலம் வீணாகிறது.ஜாதகம் பார்க்கும் நம்பிக்கைகளால் குடும்பத்தில் ஏதாவது கெட்டது நடந்தால் குழந்தைகளின் ஜாதகத்தைக் காரணம் காட்டும் பழக்கம் உள்ளது.இதன்காரணமாக குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்படுகிறது.அறிவியல் விஞ்ஞானம் தலைதூக்கினாலும் நாட்டுப்புற மக்களிடமிருந்து இந்நம்பிக்கைகள் நீங்கவில்லை.மக்களிடம் எவ்வாறு இவை உருவானது என்பதற்கும் தெளிவான தீர்வு இல்லை.

**முன்னுரை:**

நாடோடியாகத் திரிந்த மனிதன் இயற்கையின் சீற்றங்களுக்குப் பயந்தான்.இவை எவ்வாறு உருவாகிறது என்பதை உணர முடியாத அவன் தனக்குள்ளே சில சிந்திக்கத் தொடங்கினான்.இதுவே நாளடைவில் அவனுக்குள் நம்பிக்கையாகத் துளிர்த்தது.சகுனம் பார்த்தல்இகண்ணேறு கழித்தலஇபருவமடைதல் பற்றிய நம்பிக்கைகள்இதிருமணம் பற்றிய நம்பிக்கைகள்இகற்பிணி பெண்கள் பற்றிய நம்பிக்கைகள் என வாழ்வின் ஒவ்வொரு படிநிலைக்கும் நம்பிக்கைகளை வளர்த்துவிடுகின்றனர். பழங்காலம் தொடங்கி இன்றளவும் இந்நம்பிக்கை தொடர்ந்து கொண்டே இருக்கிறது.நாட்டுப்புற மக்களின் நம்பிக்கை பற்றி விளக்குவதாக இக்க

நாட்டுப்புற நம்பிக்கைகள்:

நாட்டுப்புற மக்களிடையே நிலவும் பழக்கவழக்கங்களோடு ஒன்றித்துக் காணப்படுவது நாட்டுப்புற நம்பிக்கை ஆகும்.காடுகளில் வாழ்ந்த மனிதன் வீடுகளில் வாழத்தொடங்கினாலும் அவனுடைய மனநிலையில் அதிக மாற்றம் வரவில்லை.இந்நம்பிக்கைகள் சங்ககாலத்திலும் பரவி காணப்பட்டது.ஆறலைக்கள்வர் நடமாட்டத்தை கணந்துள் என்னும் பறவை மக்களுக்கு எடுத்துக்கூறியச் செய்தி சங்க இலக்கியத்திலும் காணப்படுகிறது. இதனைஇ

“ஆற்றிய லிருந்த இந்தோட் டஞ்சிறை
நெடுங்காற் கணந்துள் ஆளறி வுறீஇ



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

ஆறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்” (குறுந் 350)

என்ற குறுந்தொகை வரிகள் புலப்படுத்துகின்றன.சுபகாரியம் பற்றி பேசும்போது விளக்கு அணைவது கெட்ட சகுனமாகக் கருதப்பட்டதைஇ

“நெடுநகர் வரைப்பின் விளக்கும் நில்லா” (புறம் 250)

என்ற புறநானூறு வரியின் மூலம் உணரலாம்.பல்லிசொல்லுதல் தமிழர் வாழ்வில் முக்கிய இடம்பெற்றதைஇ

“பகுவாய்ப் பல்லி படுதொறும் பரவி

நல்வ கூறென நடுங்கிப்

புல்லென் மாலையோடு பொருங்கொ றானே” (அகம் 289)

என்ற அகநானூறு வரிகள் மெய்ப்பிக்கின்றன.ஒருவர் நம்மை நினைத்தால் தும்மல் வரும் என்பதைஇ

“சென்றவர் உள்ளிய தன்மையர் போலு மடுத்தடுத்து

ஒள்ளிய தும்மல் வரும்” (ஐந்திணை எழுபது 40)

என்று ஐந்திணை எழுபது எடுத்துரைக்கின்றது.இவைபோன்ற பல நம்பிக்கைகள் நாட்டுப்புற மக்களிடம் காணப்படுகிறது.பயணம் புறப்படும் போது தாய் சேயைக்காண்பதும் சவ ஊர்வலத்தைக் காண்பதும் அழுக்குத் துணியோடு வண்ணான் வருதலும் நல்லது என்ற நம்பிக்கைகள் மக்களிடம் காணப்பட்டது.இறந்தபின் மோட்சம் செல்லும் நம்பிக்கையும் உள்ளது;.

“உயிர் கைலாசம் போகிறது

உயிர் சிவலோகம் வைகுண்டம் எமலோகம் போகிறது” (சு.சக்திவேல் ப-209)

நம்பிக்கைகள் அறிவியலோடும் தொட்ர்;;பு கொண்டு காணப்படுவதும் உண்டு.வடக்கே தலை வைத்து படுக்கக்கூடாது என்பது நம்பிக்கை .இதை அறிவியலும் கூறக்காண்கிறோம். “வடக்கே தலை வைத்து படுத்துக்கொண்டால் மூளையின் காந்த சக்தியும் உலகத்தின் காந்த சக்தியும் மோதிக்கொண்டு மூளை பாதிப்புக்கு ஆளாகிவிடும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்” (சு.சண்முக சுந்தரம் ப-150). வயிற்றில் இருக்கும் குழந்தை அனைத்தையும் கவனிப்பதால் கற்பிணி பெண்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும் என்பது அறிவியலாகவும் நம்பிக்கையாகவும் உள்ளது.“வளைகாப்பு சீமந்தம் போன்ற சடங்குகளையும் அச்சடங்குகளில் நம்பிக்கையூட்டும் பாடல்களையும் பாடுகின்றனர்.கை நிறைய வளையல் அணிவதுமுந்தாணையை நனைப்பது போன்றவற்றால் ஒரு மன நிறைவை ஏற்படுத்துகின்றனர்.”.(சு.சண்முக சுந்தரம் ப-5)“நம்பிக்கை என்பதுதெளிந்த எண்ணத்திற்கான உறுதிபாடு என்பதைப் புரிந்து கொள்ளலாம்.பழக்கவழக்கத்திலிருந்து வேறுபட்டதுநம்பிக்கை”(முனைவர் நிஸா ராபி ப-71)நம்பிக்கைகள் நன்மையா தீமையா என்று ஆராய்ந்தால் நன்மைகளை விட பெருந்தீமைகளே ஏற்படுகின்றன.

**கனவுபற்றிய நம்பிக்கைகள்:**

கனவு என்பது மனிதனின் உள்ளத்தின் ஆழத்தில் புதைந்துள்ள ஆசைகளை வெளிப்படுத்துவது ஆகும்.தெய்வம் அல்லது ஏதோ ஒரு சக்தி கனவின் மூலமாக நடக்கப்போவதை முன்கூட்டியே அறிவிப்பதாக நம்பப்படுகிறது.நேரில் நடப்பதற்கு எதிரானதாகவே பெரும்பாலும் கனவுகள் அமையும்.அதிகாலை கனவு பலிக்கும் என்று நம்பப்படுகிறது.

கனவில் சாவைக் காண்பது நல்லதென்றும்திருமணத்தைக் காண்பது கெட்டதாகவும் கொள்ளப்படுகிறது.பொதுவாக ஆமைகள் வீட்டில் நுழைவது கேடுவிளைவிப்பதாகக் கொள்ளப்படும்.ஆனால் கனவில் ஆமை வருவது அதி~;டமென்றும் உப்பைக் கண்டால் செல்வம் சேரும் என்றும்வெள்ளியைக்கண்டால் வெற்றி கிடைப்பதாகவும் நம்பப்படுகிறது.தாமே இறந்ததாக ஒருவர் கண்டால் ஆயுள்கூடும்.கிணற்றில் நீந்துவதாக வரும் கனவால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும.;.காகத்தைக் கண்டால் மரணச் செய்தி வரும்.சூரியன் உதயமாவதைக் கண்டால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும்.சூரிய கிரகணம் பிடித்திருப்பதைக் கனவில் கண்டால் கெடுதி உண்டாகும்.பொதுவாக சிறைச்சாலை செல்வது வேதனையான நிகழ்வாகக் கொள்ளப்படும் .ஆனால் கனவில் சிறைச்சாலையில் இருப்பது போல் கண்டால் பேரும் புகழும் உண்டாகும்.இவ்வாறு கனவில் பல நம்பிக்கைகளை நாட்டுப்புற மக்கள் வைத்துள்ளனர்.

**கண்ணேறு கழித்தல்:**

கண்ணேறு பற்றிய நம்பிக்கை உலகின் பல பகுதிகளிலும் பலதரப்பட்ட மக்களாலும் நம்பக்கூடிய ஒன்றாகும். “ஓர் ஆண் அல்லது ஒரு பெண் மற்றொரு தனிமனிதனுக்கு அல்லது அவருடைய உடைமைகளுக்கு வேண்டுமென்றோஇவிருப்பமின்றி தன்னியல்பாகவோஇ வெறுமனே பார்ப்பதன் மூலமோஇபுகழ்வதன் மூலமோ தீங்கிழைக்க முடியும் என்பதே கண்ணேறு”(தே.லூர்து ப-251).அதி~;டம் உடையவரை மற்றொருவர் பார்ப்பதால் அவருடைய அதி~;டம் போய்விடும் என்று கருதப்படுகிறது.உயிருடைய பொருட்களில் கண்ணேறு பட்டால் நோய்வாய்ப்படும.; உயிரற்ற கட்டிடங்கள் எனில் அவை இடிந்து விழும். தோட்டங்களில் கண்ணேறுபட்டால் பயிர்கள் வாடிவிடும்.பசுவாக இருந்தால் பால் வற்றிவிடும்.இவ்வாறான தீமைகள் கண்ணேறு பட்டால் ஏற்படும் என்று மக்கள் நம்புகின்றனர். அதிக கொட்டாவி, வாந்தி,மயக்கம், சோர்வுஇ தலைவலி, காய்ச்சல் இவை கண்ணேறு பட்டால் ஏற்படும் அறிகுறிகள் ஆகும்.

கட்டிடங்களில் ஒரு பானையைத் தலைகீழாக வைத்துக் கரும்புள்ளி வெண்புள்ளி இட்டுக் கட்டி வைப்பர்.வயல்களிலும் தோட்டங்களிலும் வைக்கோலால் செய்யப்பட்ட பொம்மை ஒன்றில் கறுப்புத் துணியைச் சுற்றி வெள்ளையும் கறுப்புமான பள்ளிகள் தெரிய ஒரு கம்பில் கட்டி வைப்பர்.புதிய வீடு கட்டும் போது சாம்பல் பூசணிக்காயை கட்டி வைத்தல்இ பெரிய வயிறு கொண்ட பார்ப்பனர் பொம்மை வைத்தல் ஆகியவை கண்ணேறு கழிக்க பயன்படுத்தப்படுகிறது.படிகாரக்கட்டியை அல்லது மிளகாயைக் கட்டித் தொங்க விடுதல் ஆகியன கண்ணேறு கழிப்பதாக நம்பப்படுகிறது.குழந்தைகளுக்கு கறுப்பு பொட்டு வைத்து கண்ணேறு கழிக்கப்படுகிறது.

சோதிடம் பற்றிய நம்பிகைகள்:

புpறந்த நேரத்தை வைத்து அவர்களின் எதிர்காலம் சொல்லப்படுகிறது.சோதிடம் பார்க்கும் பழக்கம் நாட்டுப்புறங்களில் மட்டுமல்லாது நகர்ப்புறங்களிலும் காணப்படுகிறது.விண்ணியல் நிகழ்வுகளே மண்ணியல் வாழ்க்கையை நிச்சயிக்கிறது என்று மக்கள் நம்பியதன் மூலம் சோதிடம் வளர்ச்சிபெற்றது.

**சகுனம் பார்த்தல்:**

சகுனம் பார்த்தல் நிமித்தம் என்றும் அழைக்கப்படுகிறது.வாழ்வில் நடைபெறும் நன்மை தீமைகளை சில அடையாளங்கள் மூலம் கணித்துக்கொள்வது நிமித்தங்கள் ஆகும்.. நன்னிமித்தம் தீநிமித்தம்.என நிமித்தங்கள் இருவகையாக உள்ளது. நற்செயல்களை விளைவிப்பதுநன்னிமித்தம் என்றும் தீய செயல்களை



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

விளைவிப்பது தீய நிமித்தம் என்றும் கொள்ளப்படுகிறது.நாட்டுப்புற மக்கள் சகுனம் பார்ப்பதில் மிகுந்த நம்பிக்கை உடையவர்கள்.

அழுக்குத்துணியோடு வண்ணான் வருதல் இ தாயும் பிள்ளையுமாக வருதல்இ கோயில் மணியடித்தல்இசுமங்கலிகள் வருதல்இகழுதை கத்துதல்இ அணில் வீட்டிற்குள் வருதல்இயானையைக் காண்பதுஇ கருடனைக் காண்பது ஆகியவை நல்ல சகுனமாக நம்பப்படுகிறது.பூனை குறுக்கே போவது,எண்ணெய்ப்பானை எதிர்ப்படல்இ ஆந்தை அலறல், நாய் குறுக்கே செல்லுதல்,முக்காடிட்டவரைக் காணல் ஆகியவை கெட்ட சகுனமாகக் கொள்ளப்படுகிறது.

பல்லி சாத்திரம் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்பட்டதால் 'கௌரி சாத்திரம்'என்ற நூல் நம் முன்னோர்களால்இயற்றப்பட்டது.சொல் பலன்,விழும் பலன் என பல்லி சகுனம் இரண்டாகப் பார்க்கப்பட்டது.பாதத்தில் விழுந்தால் நோய் வருவதாகவும் உடம்பில் விழுந்தால் தீர்க்காயுள் பெற்று வாழ்வர் என்றும் இடக்கையில் விழுந்தால் மரணம் ஏற்படும் என்றும் பலவிதமாகப் பர்க்கப்படுகிறது.பல்லியின் சொல் எண்ணிக்கையோடு திசையையும் கணக்கில் கொண்டு சகுனம் பார்க்கப்படுகிறது.

**மந்திரங்கள் பற்றிய நம்பிக்கைகள்:**

இயற்கைக்கு ஆவி உண்டு என்று நம்பிய மக்கள் மாய மந்திரங்களால் ஆவியை கட்டுப்படுத்துவதற்காகவும் திருப்திபடுத்துவதற்காகவும் மாய மந்திரங்களைக் கையாண்டனர்.இயற்கையை கட்டுப்படுத்தவும் பகைவர்களை அழிக்கவும் நோயை குணப்படுத்தவும் இம்மந்திரங்களைப் பயன்படுத்தினர்.

பில்லிசூன்யக்காரர்கள் மாந்தரீகசக்தியால் பல வித்தைகளைச் செய்கின்றனர். எதையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் தங்களிட்ம் உண்டு என்று அவர்கள் நம்புகின்றனர்.பில்லிசூன்யத்தை அழைத்தால் அதற்கு ஏதேனும் வேலை கொடுக்காவிட்டால் அழைத்தவர் மீதே பாய்ந்து விடும்.நாட்டுப்புறமக்களிடம் சூனியம் பற்றிய நம்பிக்கை படர்ந்து விரிந்து காணப்படுகிறது.

தமக்கு வேண்டாதவர் மீது செய்வினை செய்யப்படுகிறது.இதனால் தமக்கு எதிரானவர்கள் கெட்டழிவதாக நம்பப்படுகிறது.கேரள நாடு செய்வினைக்கு மிகவும் புகழ்பெற்றதாக விளங்குகிறது.

தலையெழுத்து விதி பற்றிய நம்பிக்கை:

தங்களுக்கு ஏற்படும் நன்மை தீமைகளுக்குக் காரணம் விதி என்றுநம்பும் பழக்கம் நாட்டுப்புற மக்களிடம் உள்ளது.தலையெழுத்துநம்பிக்கையால் மக்கள் சோம்பேறிகளாக வாழ்கின்றனர்.தங்கள் வாழ்வில் நடைபெறும் நன்மை தீமைகளுக்குக் காரணம் தலையில் எழுதி வைக்கப்பட்ட தலைவிதி என்று நம்புவதால் எல்லாம் விதிப்படி நடக்கும் என்று விதியின் மீது பழியைப் போட்டு விட்டு தங்களின் சோம்பேறித்தனத்தை வளர்த்துக் கொள்கின்றனர்.விதி என்று முடங்கிக் கிடக்கும் சமுதாயம் என்றும் உயர்நிலைக்கு வருவது கடினம்.விதியை நம்புகிறவன் மதியை இழக்கிறான்.

**கடவுள் பற்றிய நம்பிக்கை:**

மனிதனைப் படைப்பதும் அவன் வாழ்க்கையை நிர்ணயிப்பதும் கடவுள் என்ற நம்பிக்கை மக்களிடையே காணப்படுகிறதது. துன்பம் நேரும் போது இறைவனுக்கு அபிN~கம் செய்தால் தீமைகள் நீங்கும் என்று நம்பப்படுகிறது.நாட்டில் மழை பெய்து செழிக்க மாரியம்மன் அருள் வேண்டுமென்று

நம்பியதோடு அம்மை நோய் உண்டாக மாரிதான் காரணமென்றும் நம்பிய மக்கள் மாரிக்குச் செலுத்த வேண்டிய கடனைச் செலுத்தாவிட்டால் தப்பமுடியாது என்றும் நம்பினர்.

“ஆரு கடன் நின்றாலும் மாரிகடன் ஆவாது

மாரிகடன் தீர்த்தவர்க்கு மனக்கவலை தீருமம்மா”

என்ற வரிகள் மூலம் மாரியம்மன் மீது கொண்ட நம்பிக்கையும் பயஉணர்வும் தெளிவாகிறது.

**பிற நம்பிக்கைகள்:**

பிறரை சாபம் போடுவதால் அவர்களுக்குக் கெடுதல் வருவதாக நம்பப்படுகிறது.சத்தியம் செய்தல் என்னும் நம்பிக்கை நாட்டுப்புற மக்களிடையே காணப்படும் நம்பிக்கையாக உள்ளது.தலையில் அடித்து சத்தியம் செய்தல்,சூடம் அணைத்து சத்தியம் செய்தல்,கையில் சத்தியம் செய்தல் ஆகிய முறைகளில் சத்தியங்கள் செய்யப்படுகிறது.வளர்பிறையில் நற்செயல்கள் நடைபெற வேண்டும்.வெள்ளி தென்கோடியில் தோன்றினால் பஞ்சம் வரும்,நீண்ட நெற்றியுடையவர்கள் அறிவாளிகள்,ஒற்றை எண்கள் நன்மை பயக்கும்,கொடும்பாவி கட்டி இழுத்தால் மழைதெய்வத்தின் அருள் கிடைக்கும்.ஐந்தாவது பெண்ணும் ஆறாவது பெண்ணும் பிறந்தால் வீடு சிறப்புறும்,தை மாதத்தில் புது வீட்டில் குடியேறுவது நல்லது,காலையில் வீட்டின் பின்கதவுகள் தான் முதலில் திறக்கப்பட வேண்டும்,பயணத்திற்குப் போகும் போது போய் வருகிறேன் என்று கூற வேண்டும்,பெண்கள் வளையலின்றி இருக்கக் கூடாது.புத்தாடைகள் புதன்கிழமை அன்று அணிவது நல்லது.சனியன்று அணிவது நல்லதல்ல.கடவுளைத் தொழுது விட்டு பயணம் மேற்கொள்ள வேண்டும்.இவ்வாறாக கட்டுக்குள் அடக்க முடியாத நம்பிக்கைகளோடு நாட்டுப்புற மக்கள் வாழ்கின்றனர்.

**நம்பிக்கையின் விளைவுகள்:**

நாட்டுப்பற மக்களின் நம்பிக்கைகள் அவர்களின் உணர்வோடு ஒன்றித்துக் காணப்படுகிறது.ஆனால் இந்நம்பிக்கைகள் உண்மையிலேயே வாழ்வுக்குப் பயன்படுகிறதா அல்லது வீழ்ச்சியைக் கொடுக்கிறதா என்று ஆராய்ந்தால் அதிக விளைவுகள் தீமையாகவே உள்ளது.மேலும் இவை பல சமூகங்களில் மூட நம்பிக்கையாகவும் பார்க்கப்படுகிறது.“வீட்டை விட்டு வெளியே போகும்போது தலையிடித்து விட்டால்இஇடறிவிட்டால்இதீச்சகுனம் வந்தால் திரும்பி வந்து உட்கார்ந்து தண்ணீர் குடித்துத் திரும்பிச் செல்லுதலும் மாற்று மூட நம்பிக்கைகளே”(லூர்து.தேப-246).

முடிவுரை:

நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை இயற்கையோடு இயைந்து காணப்படுவது போல நம்பிக்கையோடும் பின்னிப்பிணைந்து காணப்படுகிறது.நம்பிக்கை எப்போது உருவானது என்பதற்கு சரியான விளக்கங்கள் காண்பது அரிது.வாழ்வை அமைப்பது விதி என்ற நம்பிக்கை நாட்டுப்புற மக்களிடம் காணப்படுகிறது.உயிர்களைப் படைத்து நன்மை தீமைகளைச் செய்வது தெய்வங்கள் என்று நம்பும் மக்கள் தெய்வங்களுக்கு திருவிழாக்கள் கொடைகள் மூலம் சிறப்புச் செய்கின்றனர்.நல்ல சகுனம,; கெட்ட சகுனம் பார்க்கும் பழக்கம் உள்ளது.கனவின் மூலம் பல நிகழ்வுகளை எதிர்நோக்குகின்றனர். அறிவியல் விஞ்ஞானம் வளர்ந்த இந்த நூற்றாண்டிலும் மக்கள் பலவித நம்பிக்கைகளுக்கு ஆட்பட்டு வாழ்வது வியப்பாக உள்ளது. சில நம்பிக்கைகள் நாட்டுப்புறங்களில் மட்டுமல்லாது நகர்ப்புறங்களிலும் காணப்படுகிறது.

**துணை நின்ற நூல்கள்:**

1. நாட்டுப்புறவியல் 2013 சு.சண்முக சுந்தரம், டிரஸ்ட்புரம்இகோடம்பாக்கம்,சென்னை-5.

2. நாட்டுப்புற இயல் ஆய்வு சு.சக்திவேல்,1983 நாட்டுப்புற இயல் ஆய்வு, முணிவாசகர் பதிப்பகம,; பாரிமுனைஇசென்னை-600 108.
3. நாட்டார் வழக்காற்றியல், 2016 தே.லூர்து, சில அடிப்படைகள் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், தூய சவேரியார் கல்லூரி,பாளையங்கோட்டை-627 002.
4. அகநானூறு, 1960 புலியூர்க்கேசிகன்,பாரிநிலையம்,90,பிராட்வே,சென்னை- 600 108.
5. புறநானூறு 1982 துரைசாமிப்பிள்ளை,திருநெல்வேலி தென்னிந்திய, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
6. சங்க இலக்கியத்தில் நாட்டுப்புற மரபுகள் 2012 காவ்யா பதிப்பகம், கோடம்பாக்கம்,சென்னை-24.
7. நாட்டுப்புறவியலில் உளவியல் பார்வை 1991 சு.சண்முக சுந்தரம், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி,சென்னை-113.
8. ஐந்திணை எழுபது 2010 அறவாணன் க.ப தமிழ்க்கோட்டம், சென்னை-29.